## குடும்ப வன்முறை தடுப்பு சிறப்பு நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கோயமுத்தூர்.

முன்னிலை- **செல்வி.N.திலகேஸ்வரி, B.Sc., L.L.M.,**
குடும்ப வன்முறை தடுப்பு சிறப்பு நீதித்துறை நடுவர்,
கோயமுத்தூர்.

2020 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவராண்டு 2051 சார்வரி வருடம் மார்கழி மாதம் 13 ம் நாள்
திங்கட்கிழமை

## **DVA No**.467/2019

1. திருமதி.சி.திவ்யா (31/20)
   க/பெ.சக்ரவர்த்தி
   க.எண்.41, அருளானந்தா நகர்,
   சின்னியம்பாளையம்,
   கோயமுத்தூர்.
2. மைனர் விஸ்வாரித்திக்
   (மைனருக்கு கார்டியனும், தாயாருமான திவ்யா) ... மனுதாரர்

**// எதிர் //**

திரு.ஈ.சக்கரவர்த்தி (39/20)
த/பெ.இளவரசன் ... எதிர்மனுதாரர்

இந்த வழக்கானது 28.03.2014 ம் தேதி DVA No.22/2014 என குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.VI கோவை நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு, விசாரணையிலிருந்து வந்த நிலையில் மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதிபதி அவர்கள் உத்தரவு எண். 2488/2017, நாள் 07.04.2017 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி 11.04.2017 ம் தேதியன்று குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.VIII கோவை நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, அந்நீதிமன்றத்தில் 09.05.2017 ம் தேதியன்று DVA No.23/2017 என வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு, விசாரணையிலிருந்து வந்த நிலையில் மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதிபதி அவர்கள் உத்தரவின்படி 24.09.2019 ம் தேதியன்று இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 01.10.2019 ம் தேதியன்று DVA No.467/2019 என வழக்குக் கோப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இறுதியாக 17.12.2020 ம் தேதி இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.C.ஞானசம்பந்தம், திரு.A.பாண்டியராஜ் மற்றும் திருமதி.J.வனிதாரோஸி அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.T.சிவக்குமார், திரு.S.சுப்ரமணி மற்றும் திரு.M.S.பாலாஜிஸ்ரீதர் அவர்கள் ஆஜராகி பின்னிட்டு, இருதரப்பு வாதங்களையும், ஆவணங்களையும்

பரிசீலனை செய்து, இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவு

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரரால் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005, பிரிவு 12-ன் கீழ் (அ) மனுதாரர்களுக்கு குடும்ப செலவு, உணவு, கல்விச் செலவு, மருத்துவ செலவு, இருப்பிடச் செலவு மற்றும் இதர செலவுகளுக்காக மாதம் ஒன்றுக்கு ரூ.25,000/-ஐ இம்மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து எதிர்மனுதாரர் வழங்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்குமாறும், (ஆ) இந்த வழக்கு தாக்கல் செய்ததில் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட செலவு தொகையை வழங்க உத்தரவு பிறப்பிக்குமாறும், (இ) இவ்வழக்கிற்கு தக்கதெனக் கருதும் மற்ற பரிகாரங்களையும் வழங்க கோரியும் இம்மனுவில் 1ம் மனுதாரர் கேட்டுக் கொள்கிறார்.

2. **மனுவின் சுருக்கம்**:

இம்மனுவில் 1ம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகிய இருவருக்கும் கடந்த 27.03.2005ம் ஆண்டு 1ம் மனுதாரரின் பெற்றோர் சம்மதமின்றி சென்னையில் உள்ள சைதாப்பேட்டை மாரியம்மன் கோவிலில் திருமணம் செய்து கொண்டு, கணவன் மனைவியாக சென்னையில் குடும்ப வாழ்க்கை நடத்தியதாகவும், திருமணத்தின் பயனாக கடந்த 07.02.2006ம் தேதியில் 2ம் மனுதாரர் விஸ்வாரித்திக் பிறந்தார் என்றும், பின்பு எதிர்மனுதாரர் கோவை சென்று தொழில் தொடங்கலாம் என்று 1ம் மனுதாரருடன் கடந்த 2007ம் ஆண்டில் கோவை வந்து சின்னியம்பாளையத்தில் வாடகைக்கு வீடு எடுத்தும், அவினாசி சாலையில் ஒரு அறையை வாடகைக்கு எடுத்து "விஸ்வா எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ்" என்ற பெயரில் சர்வீஸ் செண்டர் ஒன்று நடத்தி வந்ததாகவும், மேலும் தினகரன் நாளிதழ் அலுவலகத்திலும் எலக்ட்ரீசியனாக வேலைக்குச் சேர்ந்ததாகவும், அதன்பின் எதிர்மனுதாரரின் நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்பட்டு 1ம் மனுதாரருடன் தேவையில்லாமல் சண்டையிடுவதும், அவரை அடிப்பதுமாக இருந்து வந்துள்ளார் என்றும், இந்நிலையில் கடந்த 2011ம் ஆண்டு

எதிர்மனுதாரரின் அக்கா மகள் பிரபாவதியை எதிர்மனுதாரர் கோவையில் உள்ள KSG என்ற கல்லூரியில் சேர்த்ததால் அங்கு விடுதி கிடைக்கும் வரை எதிர்மனுதாரரின் வீட்டில் தங்க வைத்துக் கொள்ளலாம் எனக் கூறி, வீடு சிறியதாக இருந்ததால் பெரியவீடு பார்ப்பதாக 1ம் மனுதாரரிடம் கூறியுள்ளார் என்றும், அதன்பின்பு 1ம் மனுதாரருக்கு தெரியாமலேயே எதிர்மனுதாரர் வேறு ஒரு வீடு பார்த்து அந்த வீட்டில் தனது அக்கா மகள் பிரபாவதியையும், அவரது தாயையும் தங்க வைத்துள்ளார் என்றும், அதன்பின்னர் எதிர்மனுதாரர் ஒர்க்ஷாப்பில் அதிக வேலை உள்ளது என பொய்கூறி மனுதாரரின் வீட்டிற்கு வராமல் அவரது தாயாரும், பிரபாவதியும் தங்கியுள்ள வீட்டிலேயே நிரந்தரமாக தங்கி வந்துள்ளார் என்றும், இதனை தெரிந்து கொண்ட 1ம் மனுதாரர் எதிர்மனுதாரரிடம் கேட்டபோது தேவையில்லாமல் சண்டையிடுவதும், அடிப்பதும், கேவலமான வார்த்தைகளினால் திட்டுவதுமாக எதிர்மனுதாரர் இருந்து வந்துள்ளார் என்றும், இந்நிலையில் கடந்த 17.11.2011ம் தேதியன்று 1ம் மனுதாரர் எதிர்மனுதாரர் மீது புலியகுளம் மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றும், மேலும் 1ம் மனுதாரரை அடித்து உதைத்து அவரது பெற்றோர் வீட்டிற்கு எதிர்மனுதாரர் கடந்த 2011ல் 2ம் மனுதாரருடன் துரத்திவிட்டார் என்றும், இந்நிலையில் எதிர்மனுதாரர் விவாகரத்து வழக்கு கோவை குடும்ப நல நீதிமன்றத்தில் 1ம் மனுதாரர் மீது HMOP No.690/2012 என்ற மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் 1ம் மனுதாரர் ஒரு தனியார் கம்பெனியில் வேலை செய்து வந்த நிலையில் அந்த அலுவலகத்தில் மேற்படி வழக்கை பற்றி எதிர்மனுதாரர் தெரிவித்த காரணத்தினால் 1ம் மனுதாரரை மேற்படி தனியார் நிறுவனம் வேலையிலிருந்து நீக்கிவிட்டது என்றும், எதிர்மனுதாரருக்கு மேற்படி எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் நடத்தி வருவதில் மாதம் ரூ.50,000/-மும், தினகரன் நாளிதழ் அலுவலகத்தில் வேலை பார்ப்பதன் மூலம் ரூ.15,000/-மும் ஆக மொத்தம் ரூ.65,000/-க்கு மேல் சம்பாதித்து வருகிறார் என்றும், இந்நிலையில் எதிர்மனுதாரர் 1ம் மனுதாரரின் குடும்ப செலவுக்காக பணம் கொடுக்காமலும், குழந்தைக்கு கல்விச் செலவு, பொருள் உதவி செய்து கொடுக்காமலும் வாழ்ந்து வருவதால் 1ம் மனுதாரர் வேறு வழியின்றி கீழ்க்கண்ட பரிகாரங்களை கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் 1ம்

மனுதாரர் பணிந்து இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பது என்னவென்றால்,

(அ) மனுதாரர்களுக்கு குடும்ப செலவு, உணவு, கல்விச் செலவு, மருத்துவ செலவு, இருப்பிடச் செலவு மற்றும் இதர செலவுகளுக்காக மாதம் ஒன்றுக்கு ரூ.25,000/-ஐ இம்மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து எதிர்மனுதாரர் வழங்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்குமாறும்,

(ஆ) இந்த வழக்கு தாக்கல் செய்ததில் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட செலவு தொகையை வழங்க உத்தரவு பிறப்பிக்குமாறும்,

(இ) இவ்வழக்கிற்கு தக்கதெனக் கருதும் மற்ற பரிகாரங்களையும் வழங்க கோரியும் இம்மனுவில் 1 ம் மனுதாரர் கேட்டுக் கொள்கிறார்.

3. எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. **எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:**

மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், எதிர்மனுதாரர் தெரிவிப்பது யாதெனில், 1 ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 27.03.2005 ம் ஆண்டு இருவரும் காதலித்து சென்னையில் உள்ள சைதாப்பேட்டை மாரியம்மன் கோவிலில் திருமணம் செய்து கொண்டு, கணவன் மனைவியாக சென்னையில் குடும்ப வாழ்க்கை நடத்தியதாகவும், திருமணத்தின் பயனாக கடந்த 07.02.2006 ம் தேதியில் 2 ம் மனுதாரர் விஸ்வாரித்திக் பிறந்தார் என்றும், திருமணச் செலவுகள் முழுவதுமே எதிர்மனுதாரரே ஏற்றுள்ளார் என்றும், எந்தவிதமான நகையோ, பொருளோ, சீதனமோ மனுதாரரிடம் கேட்கவில்லை என்றும், எதிர்மனுதாரர் வெளியில் கடன் வாங்கி விஸ்வா எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் என்ற பெயரில் தொழில் செய்து வந்ததாகவும், மனுதாரரின் ஆடம்பர வாழ்க்கையின் காரணமாக எதிர்மனுதாரர் சம்பாதித்த பணம் முழுவதையும் பெற்றுக்கொண்டு வீண் செலவுகள் செய்து வந்ததால், எதிர்மனுதாரர் வெளியே வாங்கிய கடனை அடைக்க முடியாமல் மேற்படி விஸ்வா எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் கடையை விற்றுவிட்டு அதே கடையில் கூலி வேலை செய்து வந்ததாகவும், மேலும் எதிர்மனுதாரரின் அக்கா

மகளான பிரபாவதியை கோவையில் உள்ள KSG கல்லூரியில் சேர்த்தபோது மனுதாரர் தான் அவர்களது வீட்டிலேயே தங்கிக் கொள்ளட்டும் என்று கூறியதாகவும், அப்போது தினகரன் அலுவலகத்தில் வேலை செய்து வந்த அருண்ராஜ் மற்றும் ராமநாதன் என்பவர்கள் எதிர்மனுதாரரைப் பார்க்க வந்தபோது, அவர்கள் செல்போன் எண்களை பெற்றுக் கொண்டு அவர்களை அடிக்கடி மனுதாரரை தொடர்பு கொண்டு பேசியும் மற்றும் குறுந்தகவல்கள் அனுப்பி வந்ததாகவும், அத்துடன் மனுதாரர் பயன்படுத்தி வந்த செல்போனுக்கு அருண்ராஜ் என்பவரின் 9786608680 என்ற எண்ணில் இருந்து ஆபாசமான குறுந்தகவல்கள் வந்துள்ளன என்றும், இந்நிலையில் கடந்த 10.12.2011 ம் தேதியன்று அருண்ராஜ் என்பவர் மனுதாரரின் பெயரில் கோவை இந்தியன் வங்கியில் ரூ.3,000/-ஐ செலுத்தியுள்ளார் என்றும், மேலும் புதிய எண் கொண்ட செல்போன் ஒன்றையும் மனுதாரருக்கு வாங்கிக் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி விவரங்கள் எதிர்மனுதாரருக்கு தெரிந்து அதனைப்பற்றி கேட்டபோது வீண் சண்டைகள் செய்து வீணான பழிகளை சுமத்தி வந்துள்ளார் என்றும், இதன் காரணமாக எதிர்மனுதாரர் அவரது அக்கா மகளையும், அவரது தாயாரையும் தனியாக ஒரு வீடு பார்த்து தங்க வைத்துள்ளார் என்றும், அப்போது 1 ம் மனுதாரர் எதிர்மனுதாரரிடம் அவரது தாயாரை சென்று பார்க்கக்கூடாது என்றும், சம்பாதிக்கும் பணம் முழுவதையும் தன்னிடம் கொடுக்க வேண்டும் எனச் சண்டையிட்டதாகவும், மேலும் எதிர்மனுதாரர் மனுதாரரின் பெயரில் பல்லடம் தாராபுரம் ரோட்டில் 2 1/2 செண்ட் இடத்தை வாங்கி கொடுத்துள்ளார் என்றும், மேலும் எதிர்மனுதாரரை எப்படியாவது பழிவாங்கிட வேண்டும் என எண்ணி கடந்த 12.03.2012 ம் தேதியன்று கோவை புலியகுளம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் வரதட்சணை கேட்டதாக ஒரு பொய் புகார் கொடுத்ததாகவும், அதன் காரணமாக எதிர்மனுதாரர் சிறையில் இருந்தபோது மனுதாரர் மேற்படி சொத்து ஆவணத்தையும், ரேசன் கார்டு, ESI கார்டு, எதிர்மனுதாரருடைய தங்க செயின், மோதிரம் மற்றும் குழந்தையின் படிப்பு சான்றிதழ் ஆகியவற்றையும் எடுத்துச் சென்றுவிட்டார் என்றும், எதிர்மனுதாரர் மீது போடப்பட்டிருந்த வரதட்சணை கொடுமை வழக்கு மாண்புமிகு கூடுதல் மகளிர் நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் நிரபராதி என்று அறிவித்து விடுதலை செய்து

உத்தரவிட்டிருந்தனர் என்றும், மனுதாரர் எதிர்மனுதாரருக்கு கடந்த 21.04.2012 ம் தேதியன்று சேர்ந்து வாழ வேண்டும் என்று கூறி வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்று அனுப்பியதாகவும், அதற்கு பதில் அறிவிப்பு எதிர்மனுதாரரும் உடனடியாக சேர்ந்து வாழ வருமாறு ஒரு பதிலறிவிப்பை அனுப்பினார் என்றும், ஆனால் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வரவில்லை என்றும், பிறகு எதிர்மனுதாரர் கோவை குடும்பநல நீதிமன்றத்தில் **HMOP No**.690/2012 என்ற வழக்கை தொடர்ந்தார் என்றும், மேலும் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு கொடுத்த மன உளைச்சல் மற்றும் வீண் செலவினால் எதிர்மனுதாரர் அவருடைய சொந்த கடையான விஸ்வா எலக்ட்ரிக்கல்ஸ் ஒர்க்ஸ்-ஐ விற்று விட்டார் என்றும், மேலும் அவரது தினகரன் அலுவலகத்தில் செய்த வேலையும் பறிபோனதாகவும் தெரிவிக்கின்றார் என்றும், இதனால் எதிர்மனுதாரர் அவரது அன்றாட அத்தியாவசிய தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியாமல் அவருடைய சொந்த ஊரான ஊட்டிக்கே சென்றுவிட்டதாகவும், மேலும் மனுதாரர் மனுவில் கூறியுள்ளது போல எதிர்மனுதாரருக்கு மேற்படி எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் நடத்தி வருவதில் மாதம் ரூ.50,000/-மும், தினகரன் நாளிதழ் அலுவலகத்தில் வேலை பார்ப்பதன் மூலம் ரூ.15,000/-மும் ஆக மொத்தம் ரூ.65,000/-க்கு மேல் சம்பாதித்து வருவதாக கூறியிருப்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை என்றும், ஆகையால் மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் பணிவுடன் கேட்டுக் கொள்கிறார்.

5. மனுதாரர் தரப்பில், மனுதாரர் திவ்யா என்பவர் மட்டும் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.15 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை. எ.ம.சா.ஆ.1 என்ற சான்றாவணம் ம.சா.1 ன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இம்மனுவில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கதா?

என்பதே ஆகும்.

மனுதாரர் தனது மனுவில் 1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 27.03.2005ம் தேதியில் திருமணம் நடந்ததாகவும், 07.02.2006ம் தேதியில் 2ம் மனுதாரர் பிறந்ததாகவும் கூறியுள்ளார். எதிர்மனுதாரரும் இதனை ஒப்புக்கொண்டுள்ளார். 2010ம் ஆண்டிற்கு பின்னர் எதிர்மனுதாரரின் நடவடிக்கையில் மாற்றம் ஏற்பட்டு 1ம் மனுதாரருடன் தேவையில்லாமல் சண்டையிடுவதும், அடிப்பதுமாக இருந்து வந்ததாகவும், எதிர்மனுதாரரின் அக்கா மகள் பிரபாவதியை கோவையில் KSG கல்லூரியில் சேர்த்து 1ம் மனுதாரருக்கு தெரியாமல் வேறொரு வீடு பார்த்து அந்த வீட்டில் அக்காமகள் பிரபாவதியையும், தன் தாயாரையும் தங்க வைத்ததாகவும், வீட்டிற்கு வருவதே புறக்கணித்ததாகவும், இதுபற்றி கேட்டபோது 1ம் மனுதாரரை அடிப்பதும் சண்டையிடுவதுமாக இருந்து வந்ததாக கூறியுள்ளார். பிரபாவதியையும், அவரது தாயாரையும் விட்டுவிட்டு வரமுடியாது என்றும், அவ்வாறு வரவேண்டுமெனில் ரூ.3 லட்சம் கொடுக்க வேண்டும் என கேட்டு அடித்து, 1ம் மனுதாரரை கொடுமைக்குள்ளாக்கியதாக கூறியுள்ளார். எதிர்மனுதாரர் தனது எதிருரையில் இதனை மறுத்து 1ம் மனுதாரர் தன்னிடம் சம்பாதிக்கும் அனைத்துப் பணத்தையும் தனக்கு மட்டுமே கொடுக்கவேண்டும் எனவும், அவரது தாயாரை பார்க்கச் செல்லக்கூடாது எனவும், தனக்கும் தனது குழந்தைக்கும் சரிவர உணவு சமைத்து கொடுக்காமல் இரவு 11.00 மணிக்கு மேல் அலைபேசியில் பேசுவதையும், குறுந்தகவல் அனுப்புவதையும் வாடிக்கையாகக் கொண்டிருந்ததாகவும், அருண்ராஜ் என்பவரின் எண்ணிலிருந்து 1ம் மனுதாரருக்கு ஆபாசமான குறுந்தகவல் வந்ததாகவும், இதுபற்றி கேட்டபோது தன்னிடம் சண்டையிட்டதாகவும், அருண்ராஜ் 1ம் மனுதாரரின் பெயருக்கு கோவை இந்தியன் வங்கியில் ரூ.3,000/- செலுத்தியுள்ளதாகவும், தன்மீது பொய்யான புகார் அளித்திருப்பதாகவும் கூறியுள்ளார். ம.சா.ஆ.1 ஆனது 21.04.2012ம் தேதியன்று 1ம் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் ஆகும். ம.சா.ஆ.1-ஐ பரிசீலனை செய்ததில் மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள்தான் ம.சா.ஆ.1-லும் கூறப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. ம.சா.ஆ.2 ஆனது எதிர்மனுதாரர் 1ம் மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர்

அறிவிப்பு ஆகும். ம.சா.ஆ.2 ல் எதிருரையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார் என்பது ம.சா.ஆ.2 ஐ பரிசீலனை செய்ததில் தெரிய வருகிறது. ம.சா.ஆ.3 ஆனது 19.06.2012 ம் தேதியன்று 1 ம் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய மறு அறிவிப்பு ஆகும். ம.சா.ஆ.3-ஐ பரிசீலனை செய்ததில் எதிர்மனுதாரரின் சொற்படி 1 ம் மனுதாரர் வேலைக்கு சென்று சிக்கனமாக வாழ்ந்து வந்ததாகவும், எதிர்மனுதாரர் தான் தனது தாயாருடன் தங்க வேண்டுமென்று மனுதாரரையும், அவரது குழந்தையையும் விட்டுவிட்டுச் சென்றதாகவும், ரூ.3 லட்சம் கொடுத்தால்தான் 1 ம் மனுதாரருடன் சேர்ந்து வாழ முடியும் என கூறியுள்ளார். ம.சா.ஆ.1 முதல் 3 வரையான ஆவணங்களின் மூலம் மனுவில் மனுதாரர் கூறியுள்ள சங்கதிகள் காரணமாகத்தான் 1 ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே பிரச்சனை எழுந்ததாக தெரிய வருவதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. ம.சா.1 தனது குறுக்கு விசாரணையில் தனக்கும், தன் கணவருக்கும் இடையே முதலில் தன் கணவர் தொழிலை கவனித்துக்கொண்டு வீட்டிற்கு வராமல் இருந்த காரணத்தினால்தான் பிரச்சனை ஏற்பட்டது என்றும், அதன்பின் தன் கணவர் அவரது அக்கா மகளை படிக்கவைத்ததால் பிரச்சனை பெரிதாகிவிட்டது என்றும் கூறியுள்ளார். ம.சா.ஆ.8 மற்றும் 9-ன் மூலம் எதிர்மனுதாரர் அவரது அம்மா மற்றும் அக்கா மகளுடன் வேறு வீட்டில் தங்கிவிட்டு மனுதாரரையும், அவரது குழந்தையையும் பார்க்க வராமல் இருந்ததாகவும், அது சம்மந்தமாக கேட்டதற்கு தற்கொலை செய்து கொள்வேன் அல்லது உன்னை கொன்றுவிடுவேன் என மிரட்டியதாகவும் கூறி, மனுதாரர் புகார் அளித்ததின் பேரில் 12.03.2012 ம் தேதியன்று கிழக்கு அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம் எதுவும் முன்னிலைப் படுத்தப்படவில்லை. ம.சா.1-ன் வாய்மொழி சாட்சியம் மற்றும் ம.சா.ஆ.1 முதல் 3 மற்றும் 8,9 ஆகியவற்றின் மூலம் எதிர்மனுதாரர் மனுதாரர்களை வீட்டிற்கு வராமல் அவர்களை பராமரிக்காமல் விட்டு அவரது தாயாருடன் மற்றும் அவரது அக்காமகளுடன் தனி வீட்டில் வசித்ததுதான் 1 ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் பிரச்சனை ஏற்பட காரணமாக உள்ளது என்பது தெரிய

வருவதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. இதன்மூலம் எதிர்மனுதாரர் மனுதாரர்களை பராமரிக்காமல் தனியாக விட்டுள்ளார் என்பது நிரூபணமாவதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

7. எதிர்மனுதாரர் தனது எதிருரையில் 1ம் மனுதாரர், அருண்ராஜ் மற்றும் ராமநாதன் என்பவருடன் செல்போனில் தொடர்பு கொண்டு பேசி வந்ததாகவும், அருண்ராஜ் என்பவர் 1ம் மனுதாரருக்கு ஆபாசமான குறுந்தகவலை அனுப்பியதாகவும், அதன் காரணமாகத்தான் 1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டதாகக் கூறியுள்ளார். எ.ம.சா.ஆ.1 ஆனது 1ம் மனுதாரரும் மற்றும் ஒரு ஆண் நபரும் உள்ள புகைப்படம் ஆகும். ம.சா.1 தனது குறுக்கு விசாரணையில் அந்த புகைப்படத்தில் தானும், தன்னுடன் ரஞ்சித் என்பவரும் இருப்பதாக ஒப்புக்கெண்டுள்ளார். மேலும் அவர் தனக்கு தம்பிமுறை என்றும், தன் அப்பாவின் அக்கா பேரன் என்றும் கூறியுள்ளார். எதிருரையில் ரஞ்சித் என்பவரைபற்றி எதிர்மனுதாரர் தரப்பில் எதுவும் கூறப்படவில்லை. அவ்வாறு இருக்கும்போது எ.ம.சா.ஆ.1-ஐ ஏற்க இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அருண்ராஜ் மற்றும் ராமநாதன் ஆகியோருடன் மனுதாரர் அலைபேசியில் தொடர்பு கொண்டும், அருண்ராஜுடன் ஆபாசமான குறுந்தகவல் அனுப்பியதாகவும் எதிர்மனுதாரர் கூறியுள்ளபோதும், அது சம்மந்தமாக ஆவண சாட்சியமோ, வாய்மொழி சாட்சியமோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும் ம.சா.1 அருண்ராஜுடன் இருந்த பழக்கத்தின் காரணமாகத்தான் பிரச்சனை ஏற்பட்டு தான் தன் பெற்றோர் வீட்டிற்கு சென்றுள்ளதாகக் கூறியுள்ளதை மறுத்துள்ளார். இந்நிலையில் எதிர்மனுதாரர், 1ம் மனுதாரர் அருண்ராஜ் என்பவருடன் பழகி வந்ததால் தான் தங்களுக்கிடையே பிரச்சனை ஏற்பட்டதாக கூறியிருப்பதை தகுந்த சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

8. ம.சா.ஆ.4 ஆனது எதிர்மனுதாரர், 1ம் மனுதாரர் மீது தாக்கல் செய்துள்ள விவாகரத்து மனு எண்.690/2012 ஆகும். ம.சா.1 தனது குறுக்கு விசாரணையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்தபிறகு தான் தனக்கு விவாகரத்து கிடைத்தது என

கூறியுள்ளார். ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.1-ன் சாட்சியத்தை கொண்டு பார்க்கும்போது வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில்தான் 1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே விவாகரத்து ஆகியுள்ளதாக தெரிய வருகிறது. குடும்ப வன்முறை தடுப்பு சட்டப்பிரிவு 2(f)-ன் படி 1ம் மனுதாரரும், எதிர்மனுதாரரும் திருமண உறவின் மூலமாக ஒரே வீட்டில் வசித்துவர வேண்டும் அல்லது ஏற்கனவே வசித்திருக்க வேண்டும். எனவே வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் 1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் விவாகரத்து ஆகிவிட்டபோதிலும், திருமணப்பந்தத்தின் காரணமாக அவர்கள் இருவரும் ஒரே வீட்டில் வசித்த சமயத்தில் 2010ம் ஆண்டிற்கு பின்னர், எதிர்மனுதாரர் 1ம் மனுதாரருடன் பிரச்சனை செய்து வீட்டிற்கு செல்லாமலும், மனுதாரர்களை பராமரிக்காமலும்விட்டு, அதன்மூலம் பிரிவு 3 விளக்கம் IV a-ன் படி பொருளாதார ரீதியாக மனுதாரர்களை குடும்ப வன்முறை நிகழ்த்தியதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. 1ம் மனுதாரர் தனது மனுவில் எதிர்மனுதாரர் எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் நடத்தி மாதம் ரூ.50,000/-மும், தினகரன் நாளிதழில் எலட்ரிசியனாக பணியாற்றி மாதம் ரூ.15,000/-மும் சம்பாதித்து வருவதாக கூறியுள்ளார். எதிர்மனுதாரர் தனது எதிருரையில் இதனை மறுத்துள்ளார். ம.சா.ஆ.10 ஆனது ஐடெக் எலக்ட்ரிக்கல்ஸ் அண்ட் பவர் டுல்ஸ் என்ற நிறுவனம் மற்றும் விஸ்வா எலக்ட்ரிக்கல்ஸ் என்ற நிறுவனத்தின் பெயர் பலகை மற்றும் விசிட்டிங் கார்டுகளின் புகைப்பட நகலாகும். ம.சா.ஆ.10-ஐ பரிசீலனை செய்ததில் அதில் உள்ள விசிட்டிங் கார்டுகளின் புகைப்பட நகலில் எதிர்மனுதாரரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம் எதிர்மனுதாரர் 1ம் மனுதாரர் கூறியுள்ளது போல எலக்ட்ரிக்கல்ஸ் கடை வைத்து நடத்தி வருவது தெரிய வருவதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. ம.சா.ஆ.11 மற்றும் 12 ஆனது 2ம் மனுதாரர் படிக்கும் பள்ளிக் கட்டண ரசீதுகளின் ஒளி நகலாகும். இதன்மூலம் 2ம் மனுதாரர் ஸ்ரீ விவேகானந்தா மெட்ரிக்குலேசன் பள்ளி, ஆர்.ஜி. புதுாரில் படித்து வருகிறார் என்பதும், அதற்கு பேருந்து கட்டணம், கல்வி கட்டணம் மற்றும் சீருடை கட்டணம், புத்தக கட்டணம் ஆகியவை செலுத்தப்பட்டு

வருவதும் தெரிய வருவதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. செல்லா சிவக்குமார் மற்றும் இருவர் எதிர் செல்லா அனிதா மற்றும் இருவர், தேதி 24.10.2018 Crl.O.P. No.13188/2013 (இந்தியன் கானுான்) என்ற வழக்கில் ஆந்திரா உயர்நீதிமன்றம் விவாகரத்து ஆன பிறகும், குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தின் கீழ் மனு தாக்கல் செய்யலாம் எனக் கூறியுள்ளது. அதன் அடிப்படையில் 1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இவ்வழக்கு நிலுவையிலிருக்கும் போது விவாகரத்து ஆகியுள்ள நிலையிலும் இம்மனுவில் மனுதாரர்கள் கோரிய பரிகாரம் வழங்கலாம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. மனுதாரர் தனது மனுவில் தனக்கும், குழந்தைக்கும் சேர்த்து குடும்ப செலவு, உணவு செலவு, கல்விச் செலவு, மருத்துவ செலவு, இருப்பிடச் செலவு மற்றும் இதர செலவுகளுக்காக மாதம் ஒன்றுக்கு ரூ.25,000/- வேண்டியுள்ளார். எதிர்மனுதாரர் தனியாக எலக்ட்ரிக்கல்ஸ் ஒர்க் கடை வைத்து நடத்தி வருவதை சாட்சியம் மூலம் நிரூபணமாகியுள்ளதால் அவர் மாதம் சுமாராக ரூ.30,000/- சம்பாதிக்க இயலும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே 1ம் மனுதாரருக்கு மாதம் ரூ.5,000/-ம், 2ம் மனுதாரருக்கு மாதம் ரூ.10,000/-ம் வழக்கு தேதியிலிருந்து வழங்கிட வேண்டும் எனவும், அவ்வாறு கணக்கிட்டு வரும் நிலுவைத் தொகையை உத்தரவு தேதியிலிருந்து 2 மாதத்திற்குள்ளாக எதிர்மனுதாரர் வழங்கிட வேண்டும் என்றும், உத்தரவு தேதியிலிருந்து பின்வரும் மாதங்களில் ஒவ்வொரு ஆங்கில மாதமும் 5ம் தேதிக்குள்ளாக மேற்கூறிய பராமரிப்பு தொகையை எதிர்மனுதாரர் வழங்கிட வேண்டும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு வழக்கு செலவு தொகையையும் வழங்கிட வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடலாம் என்றே கருதுகிறது.

11. **இறுதியாக,** இந்நீதிமன்றம் இம்மனுவை அனுமதித்து

**(அ)** 1ம் மனுதாரருக்கு மாதம் ரூ.5,000/-ம், 2ம் மனுதாரருக்கு மாதம் ரூ.10,000/-ம் வழக்கு தேதியிலிருந்து வழங்கிட வேண்டும் எனவும், அவ்வாறு கணக்கிட்டு வரும் நிலுவைத் தொகையை உத்தரவு தேதியிலிருந்து 2 மாதத்திற்குள்ளாக எதிர்மனுதாரர் வழங்கிட வேண்டும் என்றும், உத்தரவு

தேதியிலிருந்து பின்வரும் மாதங்களில் ஒவ்வொரு ஆங்கில மாதமும் 5ம் தேதிக்குள்ளாக மேற்கூறிய பராமரிப்பு தொகையை எதிர்மனுதாரர் வழங்கிட வேண்டும் எனவும்,

**(ஆ)** எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு வழக்கு செலவு தொகையையும் வழங்கிட வேண்டும் எனவும் இந்நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2020ம் வருடம் டிசம்பர் மாதம் 28ம் நாள் திங்கட்கிழமையன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- N.திலகேஸ்வரி
நீதித்துறை நடுவர்,
குடும்ப வன்முறை தடுப்பு
சிறப்பு நீதிமன்றம்,
கோயமுத்தூர்.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:</u>**

ம.சா.1. திருமதி.திவ்யா

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | 21.04.2012ம் தேதியன்று மனுதாரர் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞரின் அறிவிப்பின் நகல் |
| ம.சா.ஆ.2 | 07.05.2012ம் தேதியன்று எதிர்மனுதாரர் மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞரின் அறிவிப்பு |
| ம.சா.ஆ.3 | 19.06.2012ம் தேதியன்று மனுதாரர் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞரின் மறு அறிவிப்பு |
| ம.சா.ஆ.4 | 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்த HMOP No.690/2012 என்ற மனுவின் நகல் |
| ம.சா.ஆ.5 | திருமணப் புகைப்படங்கள் (எண்ணிக்கை 2) |
| ம.சா.ஆ.6 | மனுதாரரின் குடும்ப புகைப்படம் |
| ம.சா.ஆ.7 | மனுதாரரின் மகனான விஸ்வாரித்திக் என்ற 2ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழின் நகல் |
| ம.சா.ஆ.8 | 1ம் எதிர்மனுதாரர் மீது காவல் நிலையத்தில் அளித்த |

| | |
|---|---|
| | புகார் மனுவின் மனு ஏற்பு சான்றிதழின் நகல் |
| ம.சா.ஆ.9 | கு.எண்.11/2012 கொண்ட முதல் தகவல் அறிக்கையின் நகல் |
| ம.சா.ஆ.10 | 1 ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான ஹைடெக் எலக்டிரிக்கல்ஸ் மற்றும் பவர் டுல்ஸ் கடையின் புகைப்படங்களின் நகல்கள் (3 பேப்பர்ஸ்) |
| ம.சா.ஆ.11 | 2 ம் மனுதாரரின் 3 ம் வகுப்பிற்குண்டான பள்ளிக்கட்டண ரசீதுகளின் நகல்கள் (4 ரசீதுகள்) |
| ம.சா.ஆ.12 | 2 ம் மனுதாரரின் 4 ம் வகுப்பிற்குண்டான பள்ளிக்கட்டண ரசீதுகளின் நகல்கள் (8 ரசீதுகள்) |
| ம.சா.ஆ.13 | 2 ம் மனுதாரரின் 5 ம் வகுப்பிற்குண்டான பள்ளிக்கட்டண ரசீதுகளின் நகல்கள் (4 ரசீதுகள்) |
| ம.சா.ஆ.14 | 2 ம் மனுதாரரின் 6 ம் வகுப்பிற்குண்டான பள்ளிக்கட்டண ரசீதின் நகல் |
| ம.சா.ஆ.15 | 2 ம் மனுதாரரின் 7 ம் வகுப்பிற்குண்டான பள்ளிக்கட்டண ரசீதுகளின் நகல்கள் (2 ரசீதுகள்) |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:**

எ.ம.சா.ஆ.1 புகைப்படம்

ஒம்/- N.திலகேஸ்வரி
நீதித்துறை நடுவர்,
குடும்ப வன்முறை தடுப்பு
சிறப்பு நீதிமன்றம்,
கோயமுத்தூர்.

**நகல்:**

1. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள்
2. பாதுகாப்பு அதிகாரி அலுவலர், கோயமுத்தூர்.
3. காவல்நிலைய ஆய்வாளர், பீளமேடு காவல்நிலையம், கோவை.